கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

அ.வ.எண்.207/2011
நாள்.16.10.2023

2023ம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி ஜெயலெட்சுமி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு. R. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==============================================================

| | |
|---|---|
| பெயர் = ஜெயலெட்சுமி | கணவர் பெயர்= முத்துகுமாரன் |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = |

==============================================================

**PW 1 மு.வி**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

20.06.1979 தேதியிட்ட எழுவாயி அம்மாள் பெயருக்கு ஏற்பட்ட கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.1, 02.03.1994 தேதியிட்ட எனது பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.2, இலால்குடி காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாருக்கு எனக்கு வழங்கப்பட்ட புகார் மனு ஏற்பு ரசீது அசல் வா.சா.ஆ.3, எனது கணவருக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட பிரதிவாதி தாக்கல் செய்த கேவியட் மனு சார்வு நகல் வா.சா.ஆ.4, எனக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட பிரதிவாதி தாக்கல் செய்த கேவியட் மனு சார்வு நகல் வா.சா.ஆ.5,

வழக்கறிஞர் மூலம் எனக்கு அனுப்பப்பட்ட கேவியட் (இலால்குடி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு) அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.6, வழக்கறிஞர் மூலம் எனக்கு அனுப்பப்பட்ட கேவியட் (திருச்சி, சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு) அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.7, வழக்கறிஞர் மூலம் எனது கணவருக்கு அனுப்பப்பட்ட கேவியட் (திருச்சி, சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு) அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.8, வழக்கறிஞர் மூலம் எனது கணவருக்கு அனுப்பப்பட்ட கேவியட் (இலால்குடி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு) அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வா.சா.ஆ.1 மற்றும் 2 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது.

(வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)